செ.வெ.எண்-18 நாள்-15.06.2020

# அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிக்காக நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனத்தினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை சார்பில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு பணிக்காக நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனத்தினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (15.06.2020) கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

**இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது:-**

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையில் தமிழக அரசு தீவிர நடவடிக்கையில் மேற்கொண்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சிறப்பு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனை தற்போது 04 அரசு மருத்துவமனைகள் மற்றும் 39 ஆரம்ப சுகாதார நிலையங்களில் எடுக்கப்பட்டு வருகிறது.

தற்போது இந்த நடமாடும் மருத்துவ பரிசோதனை வாகனத்தின் மூலம் தங்களது இருப்பிடத்திலே வந்து மாதிரிகளை எடுத்து அதற்கான முடிவுகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு காய்ச்சல், இருமல், சளி போன்ற ஏதேனும் அறிகுறிகள் இருந்தால் இந்த வாகனத்தில் பரிசோதனையை செய்து கொள்ளலாம்.

அரியலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய் தாக்கம் தடுக்கும் நடவடிக்கையாக பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், வெளிமாவட்டம் வெளி மாநிலம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கொரோனா தொற்று பரிசோதனை செய்யப்படுகிறது. பரிசோதனை முடிவில் தொற்று இல்லை என உறுதிசெய்யப்பட்டால் அரசு கலைக்கல்லூரி, குடிசைமாற்று வாரியம், தொழிற்பயிற்சி நிலைய விடுதி, நேஷனல் பாலிடெக்னிக் கல்லூரி போன்ற இடங்களில் ஏதேனும் ஒரு கல்லூரியில் அவர்களை 7 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்ட பின்னர் அவர்களது இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறார்கள். கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டால், உடனடியாக அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மேலும், கிராமங்கள் தோறும் சென்று பொதுமக்களிடம் இரத்தம் மற்றும் சளி மாதிரிகள் பெற்று பரிசோதனைகள் மேற்கொள்வதற்காக இன்று நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனம் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸ் தொற்று பரிசோதனைகள் அதிக அளவிலும் விரைவாகவும் மேற்கொண்டு தகுந்த சிகிச்சை அளிப்பதற்கு இந்த நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனம் பேருதவியாக இருக்கும்.

எனவே, பொதுமக்கள் எவருக்கேனும் தொடர் காய்ச்சல், சளி மற்றும் இருமல் இருப்பது கண்டறியப்பட்டாலோ உடனே அருகிலுள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சென்று உரிய பரிசோதனை செய்துக்கொள்ளுமாறும், அல்லது நடமாடும் மாதிரி சேகரிப்பு வாகனம் மூலமும் தங்களது இருப்பிடங்களில் அருகிலேயே உரிய பரிசோதனை செய்து கொள்ளலாம் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் பொ.சந்திரசேகர், அரசு மருத்துவக்கல்லூரி தலைவர் முத்துகிருஷ்ணன், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) வீ.சி.ஹேமசந்த்காந்தி, தலைமை மருத்துவமனை மருத்துவ அலுவலர் மரு.ரவிசங்கர், மருத்துவ கடுகூர் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மரு.அனிதா மற்றும் பணியாளர்கள், அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**